## வினா எண் :: 6.1.4.3.E

**இரு எண்களை ஒப்பிடுதல் - பயிற்சி**

சுதா பயிலும் அரசு மேல் நிலைப்பள்ளி அமைந்துள்ள மதிவேளூர் வட்டத்தில் உள்ள எல்லா கிராமங்களின் மக்கட்தொகையும் அவர்களில் எழுத்தறிவு உள்ளவர்களின் எண்ணிக்கையும் கீழ்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண் | கிராமத்தின் பெயர் | மக்கட் தொகை | எழுத்தறிவு உள்ளவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கன்னிவளவு | 24,653 | 18,604 |
| 2 | மதிவேளூர் | 53,564 | 44,821 |
| 3 | பனங்குளம் | 22,564 | 20,164 |
| 4 | செங்காட்டுப்பள்ளி | 19,532 | 14,842 |
| 5 | திருவேடநல்லூர் | 28,593 | 23,953 |
| 6 | வெள்ளக்கோவில் | 37,281 | 29,053 |
| 7 | சோமனூர் | 21,863 | 20,573 |
| 8 | திருக்காட்டுமங்கலம் | 47,872 | 45,843 |

## வினா

மேலே கொடுக்கப்பட்டுள்ள தரவுகளின் அடங்கிய அட்டவணையின் அடிப்படையில், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.

(A) கிராமங்களை மக்கட்தொகையின் அடைப்படையில் ஏறு வரிசைப்படுத்துக

(B) மிக அதிக மக்கட்தொகை கொண்ட கிராமம் எது?

(C) மிகக்குறைந்த மக்கட்தொகை கொண்ட கிராமம் எது?

(D) கிராமங்களை அவைகளின் எழுத்தறிவு உள்ள மக்களின் எண்ணிக்கையின் அடைப்படையில் இறங்கு வரிசைப்படுத்துக

(E) மிக அதிக எழுத்தறிவு கொண்ட கிராமம் எது?

(F) மிகக்குறைந்த எழுத்தறிவு கொண்ட கிராமம் எது?

## விடை

வினா எண் (A)-யின் விடைகாணும் படிகள்

கிராமங்களின் பெயர்களை அவைகளின் மக்கட்தொகையின் அடிப்படையில் ஏறு வரிசைப்படுத்துதல்

| ஏறு வரிசை எண் | கிராமத்தின் பெயர் | மக்கட் தொகை | எழுத்தறிவு உள்ளவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | செங்காட்டுப்பள்ளி | 19,532 | 14,842 |
| 2 | சோமனூர் | 21,863 | 20,573 |
| 3 | பனங்குளம் | 22,564 | 20,164 |
| 4 | கன்னிவளவு | 24,653 | 18,604 |
| 5 | திருவேடநல்லூர் | 28,593 | 23,953 |
| 6 | வெள்ளக்கோவில் | 37,281 | 29,053 |
| 7 | திருக்காட்டுமங்கலம் | 47,872 | 45,843 |
| 8 | மதிவேளூர் | 53,564 | 44,821 |

## விடை

வினா எண் (B)-யின் விடை

மிக அதிக மக்கட்தொகை கொண்ட கிராமம் **மதிவேளூர்** ஆகும்.

## விடை

வினா எண் (C)-யின் விடை

மிகக்குறைந்த மக்கட்தொகை கொண்ட கிராமம் **செங்காட்டுப்பள்ளி** ஆகும்.

## விடை

வினா எண் (D)-யின் விடைகாணும் படிகள்

கிராமங்களின் பெயர்களை அவைகளின் எழுத்தறிவு உள்ளவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இறங்கு வரிசைப்படுத்துதல்

| இறங்கு வரிசை எண் | கிராமத்தின் பெயர் | மக்கட் தொகை | எழுத்தறிவு உள்ளவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | திருக்காட்டுமங்கலம் | 47,872 | 45,843 |
| 2 | மதிவேளூர் | 53,564 | 44,821 |
| 3 | வெள்ளக்கோவில் | 37,281 | 29,053 |
| 4 | திருவேடநல்லூர் | 28,593 | 23,953 |
| 5 | சோமனூர் | 21,863 | 20,573 |
| 6 | பனங்குளம் | 22,564 | 20,164 |
| 7 | கன்னிவளவு | 24,653 | 18,604 |
| 8 | செங்காட்டுப்பள்ளி | 19,532 | 14,842 |

## விடை

வினா எண் (E)-யின் விடை

மிக அதிக எழுத்தறிவு கொண்ட கிராமம் **திருக்காட்டுமங்கலம்** ஆகும்.

## விடை

வினா எண் (F)-யின் விடை

மிகக்குறைந்த எழுத்தறிவு கொண்ட கிராமம் **செங்காட்டுப்பள்ளி** ஆகும்.

Sum & solution prepared on Thursday 6th May, 2021 :: 06:08 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.